1981 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இது பொதுவான கேள்வி. 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களை இந்த 80-8-ல் துவக்கவிருப்பதாக மதிப்பீடுகள் போட்டிருக்கிறோம். அதற்கான வேலைகள் நடைபெற்று, ஆணைகள்-ஜி.ஓக்கள் கூட பிறப்பிக்கப்பட்டு விட்டன. பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அந்த 20 ஆரம்பச் சுகதார நிலையங்களை எந்த அடிப்படையில் எடுத்திருக்கிறோம் என்று உறுப்பினர் அறிய விரும்புவதாக தெரிகிறது. ஜனத்தொகை அடிப்படையிலே, அதாவது 1 லட்சம் ஜனத்தொகை இருக்குமேயானல், ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க முன் உரிமை அளிக்கப்படுகிறது. அது போலவே, 10,000 அளித்து நிலத்தையும் கொடுத்து முன் வருவார்களேயானால், அதற்கும் முன்னுரிமை கொடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏன் தன்னுடைய ஒன்றியத்திற்கு வரவில்லை என்ற அடிப்படையில் கேட்கிறார் என்று நினைக்கிறேன். அதைக்கூட நிச்சயமாக அடுத்த கட்டத்தில் நிறைவேற்ற எண்ணியிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்பகோணம் அரசினர் மருத்துவமனை.

*வினா எண் 136— திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) கும்பகோணம் அரசினர் மருத்துவமனையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு விஸ்தரிக்கும் செயற்குறிப்பு உண்டா?

(ஆ) எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு விஸ்தரிப்புக்கான செயற்குறிப்புகள் அரசுக்குக் கிடைத்தவுடன் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் அரசு மருத்துவமனையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவிற்கான தனிக்கட்டிடம் கட்ட, அங்கேயுள்ள ரோட்டரி சங்கத்தினர் 2 லட்சம் ரூபாய் நன்கொடை அளிக்கத் தயாராக இருப்பதாக அமைச்சர் அவர்கள் முன்னாலேயே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த நன்கொடையைப் பெற்றாவது, குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஒன்றை உடனடியாக கட்ட அரசு முன் வருமா? அத்தோடு அங்கே பொதுமக்களே கூட அந்த மருத்துவமனைக்கென ஒரு ஜெனரேட்டர் ஒன்றை வாங்கி நன்கொடையாக வழங்கியிருக்கிறார்கள். அது பொருத்தப்படாமல், உபயோகப்படாமல் இருக்கிறது. அதை உபயோகிக்க ஏற்பாடு செய்யப்படுமா? அத்தோடு கும்பகோணம் மருத்துவமனையை தஞ்சை மாவட்டத்தின் தலைமை மருத்துவமனையாக மாற்ற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, 3 கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். கடைசியாக கேட்ட கேள்விக்கு இல்லை என்பதுதான் என்னுடைய பதில். ஜெனரேட்டர் பற்றி கேட்டார்கள். ஜெனரேட்டர்களைப் பொருத்துவதற்கான எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன. விரைவில் பொருத்தப்படும். அதற்கு முன்பாக முதல் கேள்வியாகா கேட்டதற்கு, 2 லட்சம் ரூபாய் ரோட்டரி சங்கத்தினர் நன்கொடையாகக் கொடுப்பார்களேயானால், அதை விரைவில் விஸ்தரிக்கஅரசு தயாராக இருக்கிறது. கொடுக்கவில்லை என்றாலும், அதற்கான பணிகளைச் செய்து கொண்டுதான் இருக்கிறோம். அவர்கள் நன்கொடை கொடுப்பார்களேயானால், அந்தப் பணிகள் விரைவில் முடிவுற வாய்ப்பு இருக்கும்.

திரு. ஏ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் இருக்கும் தாராபுரம் ஆரம்பச் சுகாதார மருத்துவமனையை, மாவட்ட தலைமை மருத்துவமனையாக ஆக்கவேண்டும் என்று பலமுறை விண்ணப்பங்கள் கொடுத்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. விரைவில் அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கையை எடுக்க முன்வருவாரா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி கும்பகோணம் மருத்துவமனையைப் பற்றியது. இருந்தாலும் கேள்வியை எழுப்ப அனுமதித்துவிட்ட காரணத்தால்.....(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கேள்வியை அனுமதிக்கவில்லை. இதற்குப் பதிலளிக்க வேண்டாம்.

வினா எண்கள் 137, 138 மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

கால்நடை பராமரிப்புத் துறையில் நிரப்பப்படாமலுள்ள பதவிகள்.

*வினா எண். 139— திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை பராமரிப்புத் துறையில் உதவி இயக்குநர், துணை இயக்குநர் பதவிகளுக்கு எத்தனை இடங்கள் நிரப்பப்படாமலுள்ளன?

(ஆ) அவை எப்பொழுது நிரப்பப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) உதவி இயக்குநர் பதவியில் ஒரு இடமும், துணை இயக்குநர் பதவியில் ஒரு இடமும் நிரப்பப்படாமலுள்ளன.